எப்பொழுதும் பாவியுங்கள்
ராஜ பீடி ஸ்பெஷல்


ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14.

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 9 (17-1-67) இதழ் 337

பராபவ ஷவ்வால் 5 தை 4 செவ்வாய்க்கிழமை

எப்பொழுதும் பாவியுங்கள்


ராஜ பீடி கம்பெனி, கொழும்பு 14

தொடங்கஸ்லந்தையிலும்

# சுதந்திரக் கட்சியே வெற்றி பெற்றது

## முன்னாள் எம். பியும், ஒரு செனட்டரும் காயமடைந்தனர்

கொழும்பு, திங்கள்

தொடங்கஸ்லந்தை தொகுதியில் நேற்று நடைபெற்றுமுடிந்தஉபதேர்தலில் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் அபேட்சகரான திருமதி லெடிஷியா ராஜபக்ஷ 393 அதிகப்படியான வக்குகளால் ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகர் திரு. எஸ். டபிள்யு. அலவத்து வெல்லயை தோற்கடித்துள்ளார்.

திருமதி ராஜபக்ஷவுக்கு 14,164 வாக்குகளும் ஐக்கிய தேசியக்கட்சி அபேட்சகர் திரு. அலவத்துவெலவுக்கு 13,771 வாக்குகளும் சுயேட்சையாளர் திரு. எம். ஜி. சமரப் பாலவுக்கு 178 வாக்குகளும் கிடைத்துள்ளன. தேர்தல் முடிவுகள் இன்று அதிகாலை 4-15 மணிக்கு அறிவிக்கப்பட்டன.

## "எனது வெற்றி மக்களின் வெற்றி"

கொழும்பு, திங்.

நேற்று நடைபெற்ற தொடங்கஸ்லந்தைஉபதேர்தல்வாக்களிப்பின் போது நிகழ்ந்த சிறு சம்பவங்களைத் தொடர்ந்து பதினைந்து பேர் கைதுசெய்யப்பட்டு மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் பின்னர் றிமாண்டில் வைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதற்கிடையே நேற்றுத் தலைதூக்கிய சிறுசம்பவங்களில் செனட்டர் ஏ. ஆர். எம். ஹமீம், முன்னாள் குருநாகலை எம். பி. திரு. ஜயமந்திரால ஆகியோர் சிலரினால் தாக்கப்பட்டு சிறு காயமடைந்தனர்.

"எனது வெற்றி மக்களின் வெற்றி"

தொடங்கஸ்லந்தை உபதேர்தலில் வெற்றி பெற்ற திருமதி லெடிஷியா ராஜபக்ஷ, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் தமது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

தமது வெற்றி, மக்களின் வெற்றி என்றும் தாம் வெற்றிபெறுவதற்குமூன்று (எதிர்க்) கட்சிகளுமே காரணம்என்றும்அவர்கூறினார்.

இத்தேர்தலில் தோல்வியடைந்த திரு. எஸ். டபிள்யு. அலவத்து வெலயையும் தமது ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

உபதேர்தலில் தாம் தோல்வியுற்ற போதிலும் வெற்றியையும் தோல்வியை தமது கட்சி ஒன்றாகவே மதிக்கிறதென்றும் இப்பகுதி மக்களுக்குத் தொடர்ந்து சேவையளிக்கத் தயாராகவிருப்பதாகவும் அவர் கூறினார்.

நேற்று காலையிலிருந்து வாக்குச்சாவடிகளுக்கு வாக்காளர்கள் உற்சாகத்துடன் சென்று தங்கள் வாக்குகளைப் பதிவுசெய்வதில் ஈடுபட்டிருந்தார்கள்.

பிரதமமந்திரியும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவருமான திரு. டட்லிசேனநாயக்காவும், எதிர்க்கட்சித் தலைவியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவும் தேர்தல் தொகுதியில் காணப்பட்டனர். அவர்கள் இருவரும் தொகுதியின் பல பகுதிகளிலுமுள்ள வாக்குச் சாவடிகளுக்கு விஜயம் செய்தனர்.

நேற்று காலநிலை மோசமாக இருக்கும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் காலநிலை சிறாகவே இருந்தது. இதனால் வாக்களிப்பு துரிதமாக நடைபெற வாய்ப்பாயிருந்தது. அசம்பாவித சம்பவங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

1965ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொடங்கஸ்லந்தை தொகுதியில் 25,949 வாக்காளர்கள் இருந்தனர். ஸ்ரீலங்கா கட்சியைச் சேர்ந்த திரு. ஆர். டபிள்யு ராஜபக்ச 1,054 வாக்குகளால் யூ. என். பி.யைச் சேர்ந்த திரு. ஏ. பி. ஜெயசூரியவைத் தோற்கடித்தார்.

## 20,000 வர்த்தக ஊழியர் கலந்துகொண்ட கூட்டம்

கொழும்பு, திங்கள்

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தில் அங்கம் வகிக்கும் இருபதினாயிரம் வர்த்தக ஊழியர்கள் இன்று பிற்பகல் இரண்டரை மணியளவில் தாங்கள் வேலை செய்யும் அலுவலகங்களிலிருந்து வெளியேறி ஊர்வலமாக ஹைட்பார்க் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்திற்குச் சென்றனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## கூப்பனுக்கு 2 ருத்தல் மாவு கிடைக்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள சிலகூட்டுறவுப்பண்டகசாலைகளில் கூப்பனுக்கு இரண்டு ருத்தல் மாவு வழங்கப்படுவதாகவும், சில கடைகளில் கூப்பனுக்கு ஒரு ருத்தல் மாவு மட்டுமே வழங்கப்படுவதாகவும் தெரியவருகிறது எல்லா கூட்டுறப் பண்டகசாலைகளிலும் உத்தரவாதம் பெற்ற கடைகளிலும் பாவனையாளர்களுக்குகூப்பனுக்கு 2ருத்தல மாவு வழங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் யூனியனால் செய்யப்படுகிறது.

பாவனையாளர்கள், தங்களின் வாடிக்கைக் கடையில் கூப்பனுக்கு 2 ருத்தல் மாவு பெற்றுக்கொள்ளலாம் இனிமேல். சில கடைக்காரர்கள் கூப்பனுக்கு 2 ருத்தல் மாவு கொடுக்க மறுத்தால் பாவனையாளர்கள் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்குப் புகார் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## நெற் செய்கைக்கு முடிக்குரிய காணிகள்

### வவனியாவில் வழங்கப்படும்

வவனியா, திங்கள்

வவனியா மாவட்டத்தில் உள்ள முடிக்குரிய காணிகள் ஐந்து ஏக்கர் முதல் பத்து ஏக்கர்வரை காணி உள்ளவர்களுக்கும், காணி இல்லாதவர்களுக்கும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிக உணவு உற்பத்தித் திட்டத்தில் நெற்செய்கைக்காக இந்த நிலங்களை வழங்கும்படி வவனியா எம். பி. திரு. தி. சிவசிதம்பரம் நீண்டகாலமாக மேற்கொண்ட முயற்சியின் பயனாகப் புதிய திட்டம் செயல்படவிருக்கிறது. வவனியாவிலுள்ள முடிக்குரிய காணிகளை ஒருபாடின்றி விநியோகம் செய்தால் இலங்கையின் அரிசித் தேவையை ஓரளவு வவனியாவால் பூர்த்திசெய்யலாமென்றும், இக்காணிகளை நெற்செய்கைக்கு மாத்திரமே விநியோகிக்கப்பட வேண்டுமென்றும் எம். பி. கோரியிருந்தார்.

இந்த நிலங்கள் நீர்ப்பாசனத் திட்டங்களுக்குள் அடங்குமெனவும் அறியப்படுகின்றது.

வவனியா எம். பி. திரு. தி. சிவசிதம்பரம் வவனியா மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமசபைகள், விவசாயக் குழுக்கள் ஆகியவற்றையும் ஒவ்வொரு காரியாதிகாரியின் பிரிவிலும் விண்ணப்பஞ்செய்ய பொது மக்களுக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

பூநகரி

## கிராமசபை அங்கத்தவர் சுருக்கிட்டு தற்கொலை

பூனகரி, திங்கள்

பூனகரி கிராமசபையின் ஆரும் வட்டார அங்கத்தவர் திரு. நமசிவாயம் செல்லையா கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

கிராமசபையின் முன்னாள் உபதலைவரும், பலநோக்கு கூட்டுறவுச் சங்கமொன்றின் மனேஜருமான இவர், குறிப்பிட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் அறையொன்றில் கழுத்தில் சுருக்கிட்டு இறந்துகிடந்ததாக மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணம் குறித்து விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். திரவியநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். இவரது மரணத்துக்குக் கடன்தொல்லை காரணமாக இருக்கலாமென்று விசாரணையின்போது கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

சேல்ஸ்மன்:
இருப்புக்கடையில் ஐந்து வருடத்திற்குக் குறையாத அனுபவமுள்ளவரும், ஆங்கில அறிவுடையவருமான ஒருவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். விஜயா ஹாட்வெயர் ஸ்டோர்ஸ், 146, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2252

நெசவாளர்:
நெசவாளர் தேவை. பயிற்சியடைந்தோர், பயிற்சியடையாதோர் இருபாலாரும் விபரத்துடன் 31-1-67 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விடுதி வசதியுமுண்டு. தனசி நெசவு நுண்கலை நிலையம் பழைய பட்டின சபை (Old Town Council) மானிப்பாய். 2249

## வாடகைக்கு

வீடு
கொக்குவில்கிழக்கு ஸொறம்பதி ரோட்டில் 1-2-67 தொடக்கம் ஒரு வீடு வாடகைக்குக் கொடுக்க இருக்கிறது. குழாய்த் தண்ணீர், மின்சார வசதி, நல்ல வருமானம் உள்ளது. பல்கலைக்கழகப் புகையிரத நிலையத்துக்கு அண்மையிலுள்ளது விபரம் தேவையானோர் க. சோமசுந்தரம் யாழ்/மத்திய கல்லூரி அல்லது "முருகன் வாசம்" கொக்குவில் கிழக்கில் தொடர்புகொள்ளவும். 2246

## வைத்தியம்

தோய்வு, கசம், நீரிழிவு, ரேந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பகீபூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

REGAL—JAFFNA
NOW SHOWING
Sidney James
Sylvia Sims
in
THE BIG JOB

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் Jaffna
தினசரி 2-30, 6-30 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — பானுமதி
நடித்த
காஞ்சித் தலைவன்

ஸ்ரீ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்-கே. ஆர். விஜயா
நடித்த
பணம் படைத்தவன்

சுகந்மா தியேட்டர்
நெல்லியடி
போயாதினமும் முதல் நாளும் காலை 10 மணி மெட்னி
S.S.R.— விஜயகுமாரி
நடித்த
வழிகாட்டி

யாதவா
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எஸ.எஸ.ஆர். - சுந்தராம்பாள்
நடித்த
பூம்புகார்

## ஜம்மு-காஷ்மீரில்

ஸ்ரீநகர், ஜன. 16
எதிர்வரும் பொதுத்தேர்தல் சம்பந்தமாக, தேர்தல் கமிஷனரால் வழங்கப்பட்ட தேர்தல் அறிவிப்புகளை எதிர்க்கட்சியினர் எரித்து விட்டதாக கூறப்பட்டது. இங்கு பொதுத்தேர்தல் அடுத்தமாதம் 21-ம் திகதி நடைபெறும்.

புதுடில்லி, ஜன.16
இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சக்ளா இந்தோனேஷியாவுக்கு விஜயம் செய்யும் பொருட்டு இன்று இங்கிருந்து புறப்பட்டார்.

மனோஹரா
தினசரி பிற்பகல்
3-00, 6-30, 10 00
போயா தினங்களில் 10-30 முற்பகல்
கிளியோபட்ரா

MANOHARA
Daily at 3-00, 6-30, &10-00 P.M.
Poya & Pre Poya at 10-30 A.M.
Elizabeth Taylor, Richard Burton & Rex Harrison
in
CLEOPATRA

# ஆயுள்வேத வைத்தியர் தேவை

IV-ம் பகுதி உள்ளூராட்சி, அரசாங்க வர்த்தமானி இல. 14723 தேதி 25-11-66 வைத்தியசாலைக்குப் பொறுப்பான, தரம் 2 ஆயுள்வேத வைத்தியப் பதவி பற்றிக்கொண்டுள்ள தகைமைகளையுடையவர்கள் விண்ணப்பங்களைத் தயாரித்து சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபால் மூலம் 27-1-67-ம் தேதிக்கு முன் தலைவர், கிராமசபை, எழுவைதீவு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

(1) சம்பளம் வருடம் ரூபா 600-00, வாழ்க்கைப்படி, விசேட வாழ்க்கைப்படி, வீட்டு வாடகை முதலியவைகளுமுண்டு.

(2) வயது 25க்கும் 40 க்கும் உட்பட இருத்தல் வேண்டும்.

(3) ஒருவருடம்தற்காலிகம், அடுத்து உ. ஆ. ச. அ. சபை நியமனம் பெறவேண்டும்.

இங்ஙனம்
சி. வைத்தியலிங்கம்
தலைவர்
கிராமசபை.


கிராமசபை அலுவலகம்,
எழுவைதீவு.
16-1-1967.
2186

# இப்பொழுது திரையிடப்படுகிறது!

பிளாஸா
(வெள்ளவத்தை)

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | ராஜ் (நீர்கொழும்பு) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) |
| மோடேர்ன் (பதுளை) | லக்ஷ்மி (ரத்னபுரி) | விஜிதா (ஹட்டன்) |

ஆண்டவன் உலகத்தின் முதலாளி. அவனுக்கு நான் ஒரு தொழிலாளி. அன்னை உலகின் மடியின் மேலே அனைவரும் எமது கூட்டாளி.



எம்.ஜி.ஆர். - கே.ஆர். விஜயா
எம். ஆர். ராதா, அசோகன், நம்பியார், நாகேஷ், மனோரமா
நடித்த
தேவர் பிலிம்ஸ்
# தொழிலாளி
டைரக்ஷன்: திருமுகம்.
இசை: திரையிசைத் திலகம் கே.வி. மகாதேவன்.

# 2-வது வெற்றி வாரம்!

எம்பயர் (கண்டி) 2, 6, 9-30 மணி
செல்லமகால் (கொட்டாஞ்சேனை) 2, 6, 9-30 மணி
கிங்ஸ் (பதுளை) 6, 9-30 மணி
நெல்சன் (திருமலை) 6, 9-30 மணி
ரீகல் (கம்பளை) 6, 9-30 மணி
ரீகல் (கண்டி) 2-15, 9-30 மணி
ரீகல் (நுவரேலியா) இரவு 9 மணிக்கு மட்டும்
வின்சர் (யாழ்ப்பாணம்)

சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
ஜெயலலிதா, ரவிச்சந்திரன், நாகேஷ், குமாரிசரஸவதி, நாகையா, மணிமாலா, பண்டரிபாய், சுந்தரராஜன், காஞ்சனா, ஆஷா
நடித்த

மோட்டார்
# சுந்தரம் பிள்ளை




மோட்டார் சுந்தரம்பிள்ளை படத்திலிருந்து ஓர் காட்சி.
இப்பொழுது சிலோன் தியேட்டர்ஸ்திரைகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

"சந்திரலேகா", "ஔவையார்", "சம்சாரம்", "அபூர்வ சகோதரர்கள்", "இரும்புத்திரை" ஆகிய சிறந்த படங்களை அளித்த ஜெமினியின் உன்னத தயாரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன எல்லைக்கருகே ரஷ்யப் பிரதமர்

மாஸ்கோ, ஜன. 16

சீன எல்லைக்கருகேயுள்ள இல (ரஷ்ய) பகுதிகளுக்கு விஜயம் செய்துள்ள சோவியத் பிரதமர் திரு. அலெக்ஸி கோஸிஜின் நேற்று இராணுவத் தளபதிகளுடனும் உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினர்.

சீன—ரஷ்ய எல்லையில் ஏற்படும் பதற்றநிலை குறித்து பிரதமர் கோஸிஜின் இராணுவத் தலைவர்களுடன் இங்கு பேச்சுக்கள் நடத்தியதாகச் சொல்லப்படுகிறது.

சீன—ரஷ்ய எல்லையில் சில தினங்களுக்கு முன்னர் துருப்புகளுக்கிடையே கைகலப்புகள் ஏற்பட்டதில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

# இலங்கைக்கு பிரிட்டன் அளிக்கும் உதவிகள்

லண்டன், ஜன. 16

முன்னேற்றமடைந்து வரும் நாடுகளுக்கு பிரிட்டன் அளித்துவரும் பொருளாதாரதொழில்நுட்ப உதவி இவ்வாண்டு 225,000,000 பவுண்டுகளாக அதிகரிக்குமென் எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டு அபிவிருத்தி செலவினங்கள் சம்பந்தமாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட வெள்ளை அறிக்கையில் இந்த கணக்கு விபரங்கள் தரப்பட்டிருக்கின்றன. இந்தக் கணக்கு விபரங்களின்படி 1966ம் ஆண்டு 31ந் திகதியுடன் முடிவடைந்த வருடத்தில் வெளிநாட்டு உதவி 20,000,000 பவுண்டுகளாக அதிகரித்திருக்கிறது. சகல விதமான பிரிட்டிஷ் உதவிகளினதும் மூன்றிலொருபகுதி தென் ஆசிய, தென்கிழக்காசிய, தூரகிழக்கு, பசுபிக்நாடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரை 1965ம் ஆண்டு ஜூலையிலும், 1966ம் ஆண்டு மே மாதத்திலும் உலக வங்கி இலங்கையின் பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்தும் வண்ணம் பொருள் உதவித் திட்டமொன்றைவகுத்து அது சம்பந்தமாக சர்வதேச மாநாடுகளைக் கூட்டியது. ஆரம்பத்திலிருந்தே இத் திட்டத்திற்கு ஆதரவளிக்க பிரிட்டன் உறுதிகொண்டது. பின்னர் 7,140,000 பவுண் வட்டியில்லா கடன் உட்பட பிரிட்டன் உதவிகள் அளித்துள்ளது. பிரிட்டனிலிருந்து இறக்குமதிசெய்யப்பட வேண்டிய பொருட்கள், இயந்திர சாதனங்கள் ஆகியனவற்றுக்குபிரிட்டனின்கடனுதவிகள் ஒதுக்கப்பட்டன. அது மட்டுமின்றிமேற்கு ஜெர்மனி இலங்கைக்கு வழங்கிய கடனுதவியும் பிரிட்டனிலிருந்து பொருட்களைப் பெறுவதற்கே உபயோகிக்கப்படுகிறது.

# பார்ஸா கெல்மேல் தீவுகளில் காணப்படும் அபூர்வபிராணிகள்

அல்மா அதா, ஜன. 16

ஆரல் கடலில் பார்ஸா கெல்மேஸ் என்ற தீவு இருக்கிறது. அபூர்வமான பிராணிகள் இங்கு காணப்படுகின்றன. அநேகமாக அழிந்துவிட்ட சிறிக்கும் கடற்காக்கைகளை இங்கு காணலாம்.

இங்கு மத்திய ஆசிய மான்களும், கோவேறு கழுதைகளும் உள்ளன. இவை எந்த மிருகக் காட்சிக்கும் பெருமை தருவனவாகும். 'ஆன்டிலோப்' என்னும் அபூர்வ மான்கள், மூவாயிரம் உள்ளன. இங்கே பருவநிலை மிக நன்றாக இருப்பதால், அபூர்வ பிராணிகள் செழிப்பாக வளருகின்றன.

## பத்து லட்சம் சிகரெட்டுகள்

மாஸ்கோ, ஜன. 16

பெரவானிலுள்ள பாலினால் அசிடேட் பாக்டரி, நாள்தோறும் பத்து லட்சம் "அபாயமற்ற" சிகரெட்டுகளை உற்பத்தி செய்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் சிகரெட்டுகளில் அசிடில் செல்லுலோசைக் கொண்ட நுண்துளை வடிகட்டிகள் உள்ளன. இவை சிகரெட் குடிப்போரின் உடல் நலத்தைப் பாதுகாக்கின்றன.

## மரப்பொந்திலே மோட்டார்கார்

மாஸ்கோ, ஜன. 16

ஜார்ஜியாவிலுள்ள அசோந்தரா கிராமத்தில் 600 ஆண்டு வயதுடைய ஒன்று இருக்கிறது. 24 மீட்டர் உயரமுள்ள அந்த மரத்திலே ஒரு மோட்டார் காரும், ஒரு குதிரை வீரனும் தங்கக்கூடிய அளவில், பெரிய பொந்து இருக்கிறது.

ஜார்ஜியாவைச் சேர்ந்த அபகாஸிய காட்டில் 800 ஆண்டான பைன் மரம் ஒன்றும் இருக்கிறது. இதன் உயரம் 50 மீட்டர்கள். இதன் அடிமரம் மிகப் பெரியது. இதை 6 பேர் சேர்ந்தாலும் கட்டிப் பிடிக்க முடியாது.

## 1,25,000 செயற்கைக் கண்கள்

மாஸ்கோ, ஜன. 16

சோவியத் யூனியனில் ஆண்டுதோறும் ஒன்றேகால் லட்சம் செயற்கைக் கண்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கு இரண்டு டன் விசேஷக் கண்ணாடிகள் தேவை. ஒவ்வொரு மனிதனின் கண்ணும் தனித்தன்மையில் இருப்பதால் சோவியத் நிபுணர்கள் 500 வகைப்பட்ட கண்ணாடிகளை பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொரு கண்ணும் 30 வகையான கண்ணாடிகளால் செய்யப்படுகிறது. இந்தச் செயற்கைக் கண்கள் மிக நுட்பமானவை. இயற்கை கண்களைப் போன்றவை; எவ்விதத் தொல்லையும் தராதவை.

## டாஷ்கண்டில் சாஸ்திரி சிலை

மாஸ்கோ, ஜன. 16

டாஷ்கண்டில் திரு. லால்பகதூர் சாஸ்திரி நினைவாக ஓர் உருவச்சிலை அமைக்கப்படவிருக்கிறது. இத்தகவலை உஸ்பெக்கிஸ்தான் விஞ்ஞானக்கழகத் தலைவர் வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே டாஷ்கண்டில் சாஸ்திரி நினைவாக ஒரு வீதி பெயர் சூட்டப்பட்டிருப்பது வாசகர்கள் அறிந்ததே.

## 'டெலிபதி' செய்திமுறை

மாஸ்கோ, ஜன. 16

மாஸ்கோ மனஇயல் நிபுணர்கள் 'டெலிபதி' செய்திப் போக்குவரத்துமுறையில் வெற்றி கண்டுள்ளனர். அவர்கள் மாஸ்கோவிலிருந்து 3200 கிலோமீட்டர் தொலைவிலுள்ள நோவோஸிபிர்ஸ்க் என்னுமிடத்திற்கு டெலிபதி முறையில் செய்தி அனுப்பினர். இம்முறைக்கு "ஸீனர்" கார்டுகள் சமிக்ஞைமுறை என்று பெயர்.

## பத்திரிகையை கைப்பற்றனர்

ஜோஹன்னர்ஸ்பேர்க், ஜன. 16

தென்னாபிரிக்கப் பொலிசார் நேற்றுக்காலை ஆபிரிக்க மொழிப் பத்திரிகையொன்றின் ஞாயிறு இதழின் முதற் பக்கத்தைக்கிழித்து அப்பத்திரிகையை கைப்பற்றினர்.

ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் ஐவரினதும் பெயர்களைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படாது என்று வழக்கை விசாரித்த நீதவான் தடை விதித்திருந்தும், குறிப்பிட்ட இந்தப்பத்திரிகை தனது ஞாயிறு இதழின் முன்பக்கத்தில் எதிரிகளின் பெயர்களை வெளியிட்டிருந்தது.

பினர் வந்த பத்திரிகை புதிய பதிப்பில் வழக்கு விபரம் வெளியிடப்பட்டிருந்த இடம் [illegible] வெறுமையாக விடப்பட்டிருந்தது. (பி. டி. ஸி.)

சிரிய - இஸ்ரேல் எல்லையில்

# ராணுவ நடவடிக்கை அதிகரிப்பு

ஐ. நா. (நியூயோர்க்), ஜன. 16

இஸ்ரேல்-ஸிரிய எல்லையின் இரு பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்று ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியதரிசி யூதாண்ட் ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபைக்கு முறையிட்டுள்ளார்.

எல்லையின் இரு பகுதிகளிலும் எதிர் நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே இஸ்ரேலுக்கும் ஸிரியாவுக்கும் விடுத்துள்ள கோரிக்கையில் இராணுவ நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ளுமாறு யூதாண்ட் கேட்டுள்ளார்.

# 17லட்சம்தொன் உணவுதானியம் இந்தியாவுக்கு அனுப்புக

## அமெரிக்க எம். பிக்கள் கோரிக்கை

வாஷிங்டன், ஜன. 16

இந்தியாவுக்கு உடனடியாக பதினேழு லட்சம் தொன் உணவுத் தானியம் அனுப்புமாறு அமெரிக்க அதிபருக்கு அமெரிக்கபார்லிமென்டரி குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயஞ்செய்து நாட்டின் பல பகுதிகளையும் சென்று பார்த்த இந்த பார்லிமென்டரி குழுவினர் அதிபர் ஜோன்ஸனிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையொன்றில் இந்தியாவின் உணவு நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறதென்றும், மேலதிகமாக பதினேழு லட்சம் தொன் உணவுத் தானியத்தை இந்தியாவுக்கு அனுப்பிவைக்குமாறும், இதை ஓர் அவசர உதவியாகக் கருதுமாறும் கோரியுள்ளனர்.

# தளம் அமைக்கும் தாய்லாந்து நடவடிக்கை

## வட வியட்னாமின் கடும் கண்டனம்

ஹொங்கொங், ஜன. 16


அமெரிக்க பி - 52 போர் விமானங்களுக்கு தாய்லாந்துப் பிரதேசத்தில் தளங்கள் அமைக்கத்தாய்லாந்து ஒப்பந்தம் செய்துள்ளதென அறிவிக்கப்பட்டதை, வியட்னாம் சம்பந்தமான 1954-ம் ஆண்டைய ஜெனீவா ஒப்பந்தத்தையும், சர்வதேச சட்டத்தையும் அத்துமீறி, வட வியட்னாமுக்கும், வியட்னாம் மக்களுக்கும் எதிரான ஒரு போர் நடவடிக்கையாகவே இதனைக் கருதுவதாக ஹனோய் அதிகார பூர்வமாகத் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

"இந்த அவசியமற்ற போர் நடவடிக்கைக்கெதிராகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வியட்னாம் மக்கள் உறுதி பூண்டுள்ளனர்" என வட வியட்னாம் வெளிநாட்டு மந்திரி தெரிவித்துள்ளதாக வட வியட்னாம் செய்தித் தாபனம் அறிவித்துள்ளது.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: "தமது அநீதியான இந்நடவடிக்கையின் முழுவிளைவுகளையும் தாய்லாந்தின் பிற்போக்குத் தலைவர்களே பொறுக்க வேண்டும்."


வியட்னாம் போரை விஸ்தரிக்க அமெரிக்காவும், தாய்லாந்தும் கூட்டாகச் சேர்ந்து எடுக்கும் இந்நடவடிக்கைகளுக்கு இந்தோ-சீன நாடுகளும், மற்றும் ஆசியாவிலும், உலகிலுமுள்ள சமாதானத்தை நாடும் நாடுகளும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென வடவியட்னாம் அரசாங்கம் கேட்டுக் கொள்வதாகவும் வெளிநாட்டு மந்திரியின் கூற்றில் தெரிவிக்கப்பட்டது. (பி. டி. ஸி.)

## வியட்னாமில் ...



வியட்னாம் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கக் ஹெலிக்கொப்டர்கள் வரிசையாக வந்து நின்று 'காஸ்' நிரப்பிக்கொள்வதை இங்கு காணலாம். காஸ் நிரப்பும் நிலையம் சைகோனுக்கு வடக்கே உள்ளது. வியட்காங் கொரில்லாக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்த யுத்த ஹெலிக்கொப்டர்கள் பெரும் உதவி அளித்து வருகின்றன.

## சீனாவில் ...



செங்காவலரின் எதிர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து பீகிங் ரூமன் கத்தோலிக்கப் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு ரூமன் கத்தோலிக்க கன்னியாஸ்திரீ தமது உடுப்புகளுடன் ஹொங்கொங் வந்துசேருவதை இங்கு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அனைத்தும் சிவன் செயல், அவனன்றி அணுவும் அசையாது. நாம் இழந்து போவதுமொன்றுமில்லை; ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இருந்தபடியே இருக்கிறோம்.

— யோகர் சுவாமிகள்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49 JAFFNA
Telegram EELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு தை மீ 4உ (17-1-67


## தொடங்கஸ்லந்தை தீர்ப்பு

தொடங்கஸ்லந்தைத் தொகுதியில் நடைபெற்ற உபதேர்தலிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகரே வெற்றி பெற்றுள்ளார். சென்ற பொதுத் தேர்தலிலும் சுதந்திரக்கட்சி அபேட்சகரே இத்தொகுதியில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எனவே இந்த உபதேர்தலினால் ஆளும் கட்சியின் பெரும்பான்மைப் பலம் குறைந்துவிடப் போவதில்லை. ஆனாலும் ஆளும்கட்சி இந்த உபதேர்தல் முடிவு பற்றி ஆராய்ந்து தனது நிலை என்ன என்பது பற்றி ஒரு தீர்மானத்துக்கு வர வேண்டும்.

இரா சில அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து 'தேசிய அரசாங்கம்' ஒன்றை அமைத்துக்கொண்ட யு. என். பி. ஆட்சிக்கு வந்து சுமார் இரண்டு வருடங்களாகின்றன. இந்த இடைக்காலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உபதேர்தலுடன் நான்கு உபதேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இந்நான்கிலும் எதிர்க்கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியே வெற்றி பெற்றிருக்கிறது. மூன்று தொகுதிகளில் தனது ஸ்தானங்களை அது காப்பாற்றியிருக்கிறது. பெந்தர-எல்பிட்டித் தொகுதியில் அது வெற்றியீட்டியிருக்கிறது. அதாவது நான்கு தொகுதிகளிலும் ஆளும் கட்சி தோல்வியடைந்த போதிலும் பெந்தர-எல்பிட்டியில் தான் அது 'முழுத்தோல்வி' யடைந்தது. பலாங்கொடை, பண்டாரவளை, பெந்தர-எல்பிட்டித் தொகுதிகளில் போலவே தொடங்கஸ்லந்தைத் தொகுதியிலும் முன்னையிலும் சுதந்திரக்கட்சி குறைந்த அதிகப்படியான வாக்குகளினால்தான் வெற்றி பெற்றிருக்கிறது. அதாவது தேர்தல் முடிவுகள் ஆளும் கட்சிக்குத் தோல்வியைக் கொடுத்துள்ள போதிலும் வாக்களிப்பு விபரங்களைக் கவனிக்கையில் ஆளும் கட்சியின் கொள்கைகளுக்கு மக்களின் ஆதரவு அதிகரித்துள்ளதே தவிர குறைந்துவிடவில்லையென்று கருத இடமுண்டு. ஆனாலும் சுமார் இரண்டு வருட ஆட்சிக் காலத்தில் உபதேர்தல் ஒன்றிலாவது ஆளும் கட்சி வெற்றியீட்டத் தவறியிருப்பது நிச்சயம்! அதற்குப் பெருமை அளிக்க முடியாது.

முன்னைய மூன்று உபதேர்தல்களிலும் ஆளும் கட்சி அபேட்சகர்கள் தோல்வியடைந்ததற்கு, "தமிழரசுக் கட்சியினரின் அறிக்கைகளும், சமய சந்தர்ப்பம் தெரியாது அமைச்சர் திருச்செல்வம் மேடைகளில் மாவட்ட சபைகள் பற்றி பேசியதும் முக்கிய காரணம்" என்று ஆளும் கட்சியிலுள்ள சிலர் 'தமிழரசுக் கட்சியினர்' மீது 'பழி' சுமத்தினர். தொடங்கஸ்லந்தை உப தேர்தலில் ஆளும்கட்சி தோல்வி கண்டதற்கு அவர்கள் இனி யார்மீது 'பழி' போடப் போகின்றனர்?

தொடங்கஸ்லந்தை உபதேர்தலில் இலவச அரிசியும், வர்த்தக எம். பி. சுருதிஜாவுக்கு எழுதியதாக எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட கடிதமும் முக்கிய பிரசாரக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. எதிர்க்கட்சியினர் 'அரிசிவெட்டை' முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தினர். வகுப்புவாதத்தையும் எதிர்க்கட்சி வீரர் சிலர் மறந்துவிடவில்லை. ஆனால் வகுப்புவாதத்துக்கு முன்பிருந்தது போல் இன்று அதிக ஆதரவு இடைக்கவில்லை.

அரிசியின் அளவைக் குறைத்தாலும் அதை இலவசமாக வழங்குவதின் மூலம் மக்களின் ஆதரவைப் பெற்றுவிடலாம் என அரசாங்கம் நினைத்ததில் தவறில்லை. ஆனால் தொடங்கஸ்லந்தை உபதேர்தல் சமயத்தில் இலவச அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்ததும், தேர்தல் பிரசாரத்துக்கு அதைப் பயன்படுத்த முனைந்ததும் 'இலவச அரிசித் திட்டம்' தேர்தல் தந்திரம் என்ற சந்தேகத்தை மக்கள் மனதில் ஏற்படுத்தக் காரணமாக அமைந்திருந்தது. இதே சமயம் அரிசித் தட்டுப்பாட்டைச் சமாளிக்கத் தயாராக இருந்த மக்களுக்கு மாவு, மல்லி, மிளகாய் மற்றும் உபஉணவுப் பொருள்களும் கிடைக்க முடியாது போனதும் அரசாங்கத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்தியது.

நிதி மசோதா கொண்டுவரப்பட்டாலும், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கான மசோதா அதாவது இலங்கையிலிருந்து ஐந்தேகால் லட்சம் இந்திய வம்சாவழியினரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதற்கான மசோதாவைக் கொண்டுவந்த போதிலும், சிங்களம்மட்டும் சட்டத்தை அமுல் நடத்துவதற்கென அரசாங்கம் விதிகள் தயாரித்துத் திட்டமிட்டாலும் பொது மக்களைப் பொறுத்தவரையில் உணவும் உடையும் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வேண்டுமென்பதையே உபதேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தியிருக்கின்றன. உணவுப் பொருள் தட்டுப்பாடு, வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய பிரச்னைகளுக்கு ஓரளவாவது நடைமுறையில் தீர்வுகாணப்படாதவரை பொதுமக்களின் ஆதரவைப் பெறுவது கடினம் என்பதையே தொடங்கஸ்லந்தை உபதேர்தல் உணர்த்துகிறது.

# யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறும் மூலிகைக்கண்காட்சி

பலதரப்பட்ட சுவாத்திய நிலைகளைக் கொண்ட இலங்கையில் பல தாவர இனங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இராம இராவண யுத்தத்தின் உச்சக் கட்டத்தில் அனுமார் சஞ்சீவி மலையை இலங்கைக்குக் கொண்டுவந்து யுத்த வீரர்களுக்குக் கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. இக்காரணங்களால் மருத்துவத்துக்கு உபயோகிக்கக்கூடிய சிறந்த பச்சிலை மூலிகைகள் எமது நாட்டில் பரவலாயிருக்கிறது. பல பச்சிலை மூலிகைகள் நூல்களில் கூறப்பட்டிருப்பினும் அவற்றின் அடையாளங்களையும் குணங்களையும் தெரிந்தவர்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். பல பச்சிலைகள் நூல்களில் கூறப்படாமலும் குருவின் அனுபவத்தில் பாவிக்கப்பட்டும் வருகின்றன.

இவ்விதம் மூலிகைகளின் அடையாளங்களைத் தெரிந்தவர்கள் காலக்கிரமத்தில் குறைந்துவிடாமல் மூலிகைகளைப் பற்றிய அறிவு வளர்ச்சியடையவேண்டும் என்னும் நோக்கத்திற்காக வேதான் அகில இலங்கை சித்த ஆயுர்வேத வைத்திய சங்கத்தினால் இலங்கையில் சிறப்பாக வடக்கு மாகாணங்களில் கிடைக்கக்கூடிய வைத்தியர்களால் பாவிக்கப்படும் மூலிகைகளைக் காட்சியில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தனி மூலிகைகளின் தனிச் சிறப்பை அறிஞர்கள் இன்று ஆராய்ந்து அவற்றையும் பிரபல்யப்படுத்தி வருவதை இலங்கையிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆயுர்வேதம், வளர்ந்துவரும் விஞ்ஞான விருத்திக்கு ஈடுகட்ட முடியாது எனச் சிறிதுகாலத்துக்கு முன்புவரை குறைவாக எண்ணிய மேல்நாட்டு மருத்துவம், ஆயுர்வேதத்தை விஞ்ஞானக் கண் கொண்டு பார்த்தால் அதில் எண்ணிறைந்த நன்மைகள் கிடைக்குமென்பதை இன்று கண்டுள்ளார்கள்.

ஏற்புச்சன்னி நோய்க்கு "ஏ. ரி. எஸ்." தடுப்பு மருந்து கொடுக்க முடியாத நோயாளிக்கு கரமஞ்சள்

(5-ம் பக்கம் பார்க்க)

## நிகழ்ச்சிகள்

வட இலங்கை சுதேச வைத்திய சபையாரின் ஆதரவில் ஆயுர்வேத 'டிப்ளோமா' பத்திரம் வழங்கும் (பட்டமளிப்பு) விழா, இன்று மாலை, யாழ்ப்பாணத்திலுள்ள லங்கா ஆயுர்வேத சித்த வைத்தியக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இச்சபையின் செயலாளர் காலஞ்சென்ற திரு. சி. டபிள்யு. டி. அல்லையனின் உருவப் படத்தை வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா திரைநீக்கம் செய்து வைப்பார். வைத்தியாச்சாரி ஏ. எஸ். இராசையா 'டிப்ளோமா' பத்திரங்கள் வழங்குவார்.

இன்றும் நாளையும் யாழ்ப்பாண ஆயுர்வேதக் கல்லூரியில் மூலிகைக் காட்சி பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படும்.

## பட்டமளிப்பு வைபவம்

— வைத்திய மாணவன் அ. அன்ரனி —

ஆயுர்வேத சித்த வைத்தியக் கலையானது இன்று நேற்று ஆரம்பமானதல்ல. பழமையானது. அகராதி தொண்டினால் சுவிசா ஊக்கத்தினால் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. ஈழத்திலே குறிப்பாக, வடமாகாணத்திலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டதென்றால் அதற்குக் காரணம் வைத்தியாச்சாரி ஏ. எஸ். இராசையா ஆகும். இவர், தமிழ் ஆசானுப் பணியாற்றியபோதும் வைத்தியத்துறையில் தன்னிகரற்றவராக விளங்கினார். ஆங்கில மருந்துகளுடன் போட்டி போடக்கூடிய சிறந்த தமிழ் மருந்துகள் இருந்தும் தற்கால சுதேச வைத்தியர்கள் ஆங்கில மருந்துகளை உபயோகிப்பதையிட்டு அடிக்கடி மனம் வருந்திக் கூறுவார். அவரின் வைத்தியசாலையில் ஆங்கில மருந்துகளின் வாசனையையே காணமுடியாது. சுதேச வைத்தியத்தில் நீங்காத பற்றுடையவர் என்றால் மிகையாகாது.

இலங்கை ஆயுர்வேத சித்த வைத்தியர் சங்கம் என்னும் சங்கத்தை ஸ்தாபித்த ஸ்தாபகர்களில் இவர் முதன்மையானவர். இற்றைவரையும் இதன் செயலாளராகக் கடமையாற்றி சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவருகிறார்.

இப்படியாகத் தமிழ்வைத்தியத்திற்காக உழைத்துவரும் வைத்தியாச்சாரி ஏ. எஸ். இராசையாவுக்கு 'வைத்திய பூபதி' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவிக்க அ. இ. சி. வைத்திய சங்கம் முன்வந்தது பாராட்டவேண்டியதே. இப்பட்டத்தினை, பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி. வழங்குவது பொருத்தமாகும். அன்னாருக்குப் பட்டம் வழங்கும் விழா இன்று நடைபெறுகின்றது.

### நாட்டிலும் நகரிலும்

18-ம் நூற்றாண்டின் கடைசியில் பிரான்ஸ் தேசத்தில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. முடியரசுக்கு ஆபத்து வந்தது. ஜனங்கள் சாப்பாடு கிடைக்காமல் திண்டாடினார்கள். கைத்தொழில் புரட்சியின் ஆரம்பம் அப்பொழுது. நாடெங்கும் சாதாரண பொது மக்கள் திரண்டெழுந்தனர். குறுநில மன்னர்களும் பிரபுக்களும் கதிகலங்கினார்கள். மக்கட்படை சமுத்திரம் போல் எழுந்து தலைநகரத்திலுள்ள அரண்மனையை முற்றுகை போட்டது.

அரண்மனைக்குள்ளே லூயி மன்னனும் மாரி அன்ரனி பெற் அரசியும் திராட்சைப் பழம், ஆப்பிள் பழம், கேக் உவைன் முதலியசுவையான உணவுகளை உண்டுகளித்து உல்லாசமாயிருந்தனர். அச்சமயம் ஒருமந்திரி திடீரென்று அவர்களுடைய அந்தரங்க அறைக்குள் பிரவேசித்து 'மகாராஜவே, மஹாராணியே! ஆபத்து வந்துவிட்டது! மக்கள் படையெடுத்து எழுந்துவிட்டார்கள் அரண்மனை முற்றுகை போடப்பட்டுவிட்டது!' என்று குளறிப்பதறினான்.

கொழு கொழுவென்று மினுமினுக்கும் திராட்சைப் பழம் ஒன்றை வெள்வெட்டு சோபாவில் சாய்ந்தவாறே ஆறுதலாக வாய்க்குள் போட்டு சுவைத்துக்கொண்டிருந்த அரசி ... பார்த்து 'ஏன், மக்களுக்கு என்னவேண்டுமாம்?' என்று கேட்டாள்.

'அவர்களுக்கு உண்பதற்கு ரொட்டி இல்லையாம். ஆகையினால்தான் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்' என்றான் மந்திரி.

'பூ, இவ்வளவுதானா? ரொட்டி இல்லாவிட்டால் கேக் சாப்பிடச் சொல்லுங்கள்!' என்றாளாம் அந்தமகாராசி.

# ரொட்டி இல்லையா? கேக் சாப்பிடு!

இலங்கையில் இப்பொழுது அரிசிப்பஞ்சம் ஏற்பட்டிருப்பதை எல்லோரும் அறிவார்கள், அரிசிக்கு மட்டுமா பஞ்சம்? கொத்தமல்லி, மிளகாய், பம்பாய்வெங்காயம், உருளைக்கிழங்கு எல்லாமே ஓடிஒளிந்துவிட்டன. சர்க்கரை, புளிக்கும் தூண்டில் போடவேண்டியிருக்கிறது. தைப்பொங்கலுக்கு ஒன்றரைரூபாய் கொடுத்து ஒரு கொத்து பச்சையரிசி வாங்க வேண்டியிருந்தது. பல இடங்களில் நாட்டரிசி 1-70, 1-80 என்றும் விற்கிறதாம்.

இத்தகைய இக்கட்டான நிலைமையில் நாம் இருக்கும் போது கொழும்பிலும் பிற பட்டினங்களிலும் வசிக்கும் தனவந்தர்கள் தங்கள் பங்களாக்களில் விதம் விதமான ரோஜாப் பூக்களையும் லில்லிகள், ஓர்க்கிட்டுகள் முதலிய வேறு பூவகைகளையும் தாலாட்டி தாலாட்டி பசளை பூட்டி வளர்ப்பதையும் பார்க்கும்போது மாரி அன்ரனியற்றின் நினைவு எமக்கு வருகிறது.

நிலத்தைப் பண்படுத்தி உணவுப் பயிர் வளர்க்கும் பாட்டாளி மக்கள் வேண்டாததென்றுகளைந்தெறியும் நாகதாளியும் தாயுண்ணிச் செடியும் கொழும்பு மாநகரத்திலே பூந்தொட்டிகளில் வைத்து அல்லும் பகலும் அன்போடு வளர்க்கப்படும் காட்சியைப் பார்க்கும்போது. கன்றாவியாயிருக்கிறது.

அழகான பூங்காவனம் அகத்தைக் கவர்ந்திருப்பது ஓர் அலங்காரமான காட்சிதான். மனிதனுக்கு வயிற்றுக்கு மட்டும் உணவு இருந்தால் போதாது, ஆத்மீக ரசனையும் வேண்டும் தான். ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால், வயிற்றுக்கு தட்டுப்பாடு உண்டாகும் காலையில் எது முக்கியமானது என்பதை நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தியாவில் நல்ல இன நெல் வகைகளை இப்பொழுது வீட்டுப் பூந்தொட்டிகளிலும் வைத்து வளர்க்கிறார்களாம். வயிற்றுப் பசியா வண்ணமலரா முக்கியமானது என்பதை அவர்கள் உணர்ந்து விட்டார்கள். நாமும் ஏன் அவர்களைப் பின்பற்றலாகாது?

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

திருக்கேதீஸ்வரம், திங்கள் திருக்கேதீஸ்வரம் பாலாவிக்கரையின் அருகில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பிள்ளையார் கோவிலின் கும்பாபிஷேகம் 26-ம் திகதி சிறப்பான முறையில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிச்சபையும் இலங்கை போக்குவரத்து சபை (யாழ்ப்பாணம் டிப்போ) இந்து ஊழியர்களும் கவனித்துவருகிறார்கள்.

## ராஜினாமா வாபஸ

மானிப்பாய், திங்கள் அகிலஇலங்கை தமிழ் பௌத்தசங்கத்தலைவர் திரு ம. வைரமுத்து ராஜினாமாச் செய்ததைத்தொடர்ந்து கூடிய பொதுநிர்வாக சபையின் முடிவின்படி ஐந்து அங்கத்தவர்களைக்கொண்ட சமாதானக்குழு நியமிக்கப்பட்டு அக்குழு தலைவரைப் பேட்டிகண்டதன் பலனாக, திரு. ம வைரமுத்து தமது ராஜினாமாவை வாபஸ் பெற்றதோடு, மீண்டும்தலைவராகப் பணியாற்றுவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார்.

## "நாடடுக்கேற்ற கல்வி முறை"

பூநகரி, திங்கள் "நாட்டுக்கேற்ற, நல்வாழ்வுக்கேற்ற அனுபவரீதியான கல்வியே இன்றைய உடனடித் தேவையாகும். தொழில் செய்து வாழவேண்டியதன் அவசியத்தை உணர்த்த இந்த வேலை அனுபவத்திட்டம் பெரிதும் உதவும்" என்று பூநகரி மகாவித்தியாலயத்தின் பாதையமைப்பு சிரமதானத்தைத் தொடக்கிவைத்துப் பேசிய பூநகரி பெரும்பாகஇறைவரி உத்தியோகத்தர் திரு. ரி இராசதுரை குறிப்பிட்டார்.

அதிபர் எம். சிவானந்தம் வரவேற்றுப் பேசுகையில், மாணவர்வீட்டுத்தோட்டம் அமைத்து நாட்டுக்காகச் செய்யவேண்டிய வேலைகளை வலியுறுத்தினார். இருவிகப் போதனாசிரியர் திரு. எம் நித்தியானந்தமும் பேசினர் திரு. எம். சிவகுரு நன்றி கூறினார்.

## கமத்தொழிலாளர் சங்க கிளை

செட்டிகுளம், திங்கள் செட்டிகுளத்தில் கமத்தொழிலாளர் சங்கக் கிளை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை திருவள்ளுவர்கழகம் மேற்கொண்டுள்ளது.

——

பீகிங், ஜன. 16 மக்காவோவுக்கு அதிபோகிக்கப்படும் தண்ணீரில் 30 சதவிகித தண்ணீரை சீனா இப்பொழுது குறைத்துள்ளது.


# பி. எஸ். ஏ. சைக்கிள் ஒட்டப்பந்தயம்

## "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் நடாத்தப்படும்

### விபரங்கள்

ஜனவரி 25, 1967 — பி. ப. 4-00 மணி

**முதலாவது ஒட்டப்பந்தயம்**

**மாணவர் போட்டி**

ஐந்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

முதலாவது பரிசு: பி. எஸ். ஏ. சைக்கிள்

இரண்டாவது பரிசு: கிரிக்கெட் மட்டை

ஜனவரி 25, 1967 — பி. ப. 4-30 மணி

**இரண்டாவது ஒட்டப்பந்தயம்**

**வயது வந்தோர் போட்டி**

பத்துமைல் — யாழ். கோட்டையைச் சுற்றி

முதலாவது பரிசு: பி. எஸ். ஏ. சைக்கிள்

இரண்டாவது பரிசு: இரண்டு அடுப்பு "டமைன்ம்" குக்கர்

### விதிகளும் நிபந்தனைகளும்

**முதலாவது ஒட்டப்பந்தயம்**

1. பங்குபற்றுவோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதோ அல்லது அதற்குக் குறைந்தவர்களாகவோ இருக்க வேண்டும்.
2. பந்தயத்தில் பங்குபற்றப் போதிய உடலுறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.
3. 'ஈழநாடு'டில் வெளியாகும் கூப்பன் பத்திரங்களிலேயே எல்லா விண்ணப்பங்களும் அனுப்பப்பட வேண்டும்.
4. பங்குபற்றுவோர் பி. எஸ் ஏ. சைக்கிள்களிலேயே ஓட வேண்டும்.
5. விண்ணப்ப முடிவு திகதி: ஜனவரி, 20, 1967.
6. முடிவு திகதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பமெதுவும் ஏற்றுக் கொள்ளப்படாது.
7. ஒட்டப்பந்தய முடிவுக்குப்பின் எவ்விதக் கடிதத் தொடர்பையும் "ஈழநாடு" ஏற்காது.
8. மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.
9. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 5 கூப்பன்கள் இணைக்கப்படவேண்டும். போட்டிக் கூப்பன்களை சைக்கிள் ஒட்டப் போட்டி, "ஈழநாடு" த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

**இரண்டாவது ஒட்டப்பந்தயம்**

இதில் கலந்துகொள்வோர் யாவரும் ஜனவரி 1, 1967-ல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

மற்றும்படி, முதலாவது ஒட்டப்பந்தயத்துக்கான விதிகளும், நிபந்தனைகளும் இரண்டாவது ஒட்டப்பந்தயத்துக்கும் உரியனவாகும்;

### அறிவிப்பு

தவிர்க்க முடியாத காரணங்களால் 'ஈழநாடு' சைக்கிள் ஒட்டப் போட்டி 1967 ஜனவரி 25-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள தென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மற்றவர்களை முந்திச் செல்ல


BSA

பி. எஸ். ஏ.

கோல்டின் டி லக்ஸ்

ரேட்ஸ்டர் சைக்கிள்களையே

தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

நார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்

### கூப்பன்

1. நான் 18 வயதுக்கு மேற்பட்டவன் / உட்பட்டவன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன். நான் முதலாவது / இரண்டாவது போட்டியில் பங்குபற்றுகிறேன். (தேவையற்ற சொல்லை வெட்டிவிடவும்.)
2. இந்த சைக்கிள் போட்டி சம்பந்தமான சட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட நடந்துகொள்வேன்.

பெயர்: ____________________

விலாசம்: ____________________

இலக்கம்: ____________________

[பி. எஸ். ஏ. சைக்கிளின்பிரேம் (frame)]

(கோட்டிக் வெட்டி எடுக்கவும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஆன்மா லயிக்கின்ற இடம் ஆலயம்; அங்கு செல்லப் பாகுபாடா?"

சங்கானை, திங்கள்

'ஆன்மா லயிக்கின்ற இடமே ஆலயமென அழைக்கப்படுகின்றது. இவ்வாலயங்களுக்குச் செல்வதற்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இருக்கின்றதைப் பார்க்கும்போது வேதனைக்கு மேல் வேதனையளிக்கிறது' என சித்தன்கேணி கணேச வித்தியசாலையில் நடைபெற்ற மனித உரிமைத்தின விழாவில் வலி-மேற்கு காரியாதிகாரி திரு. என். மாணிக்க நடராசா பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு திரு. ஆர். நடராசா தலைமைவகித்தார்.

திரு. மாணிக்கநடராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'சமூகத்தில் உயர்சாதியாக இருக்கும் அநேகர் மாமிச உணவும் மதுவகையும் பாவிப்பவர்களென்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. சைவ ஆகம முறைப்படி பார்த்தால் உயர்சாதி மக்களும் ஆலயத்திற்குள் செல்லத் தகுதியற்றவர்களாகின்றனர். ஆகையால் சிறுபான்மை மக்களையும் சீர்திருத்திச் சமூகத்தில் ஏற்கவேண்டியது எங்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும்."

மற்றும் திருவாளர்கள் சி. சுப்பிரமணியம், எம். யேம்ஸ், கே. வயிரவநாதர் பண்டிதர் மி. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

## 'வீதிக்கொரு வாசிகசாலை'

யாழ்ப்பாணம், செவ்

"வீட்டுக்கொரு வாசிகசாலை இருக்கவேண்டும் என்று சொல்வார்கள். அது மிகமிகத் தேவைதான். ஆனால் இன்றுள்ள வாழ்க்கைப் பிரச்னைச் சிக்கலில் அரிசி இல்லை, மா இல்லை, மல்லி இல்லை, புளி இல்லை. இன்னும் என்னென்னமோ எல்லாம் இல்லாமலிருக்கும். இன்றையசூழ்நிலையில் மக்கள் வயிற்றுப் பிரச்னையே ஒரு மகத்தான பிரச்னையாகக் கருதி அதற்காகப் போராடிக்கொண்டு இருக்கும்நேரத்தில் வீட்டுக்கொரு வாசிகசாலை என்பது சமிப்பட்டுவராது போனாலும் வீதிக்கொரு வாசிகசாலை என்பது மிகவும் தேவையானதாகும். ஏனெனில் இந்த இல்லை இல்லையென்ற பிரச்னைகளை இல்லாமற்செய்வதற்கும், நமது பிற்சந்ததி ஷேமமாக வாழ்வதற்கும் ஓர் அத்திவாரம் இன்றே போடப்பட வேண்டுமானால் மக்களுக்கு அறிவு தேவை" என்று யாழ்ப்பாண கிட்டே சன்பகுதியிலுள்ள அம்பிரட் வாசிகசாலையின் முதலாவது ஆண்டுவிழாவில் பேசும்போது திரு. டொமினிக் ஜீவா குறிப்பிட்டார்.

திரு. க. இராசையா தலைமைவகித்தார்.


## டைம் கிறீம்

உலகப் பிரசித்தி பெற்றது இரம்மியமானது. இது, இல்லறவாழ்க்கையில் பூரண திருப்தி அளிப்பது. புகழ்வாய்ந்த மேல்நாட்டு மருத்துவ நிபுணர்களால் உயர்தர ரசாயன மருத்துவசாலையில் தயாரிக்கப்பட்டது. முழு விபரங்களுக்கும் எமக்கு எழுதுங்கள். V. P. P. மூலம் அனுப்பப்படும்.

விலை ரூ. 5/-

தபால் செலவு சதம் -/25

மெட்ரோ ஏஜென்ஸி

235 1/1, நொரிஸ் றேட்,

கொழும்பு-11


## ஜப்பானில் இரு தீ விபத்துகள்

### 11 பேர் மாண்டனர்

டோக்கியோ, ஜன. 16

நேற்று ஜப்பானிலுள்ள கோபே என்னுமிடத்தில் ஓர் இரண்டு மாடி மரக்கட்டிடம் தீப்பற்றியதன் விளைவாக 6 பேர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர். 49 வயதான ஒருவர் மட்டுமே தப்பினார். அவரது மனைவியும், தந்தையும், நான்கு மகன்களும் பெருந்தீயில் இறந்தனர். இத் தீ வேறு மூன்று வீடுகளையும் அழித்து, 20பேரை வீடற்றவர்களாக்கிவிட்டது.

டோக்கியோவுக்கருகாமையில் உள்ள யொக்கோஹாமா என்னுமிடத்தில் ஏற்பட்ட மற்றுமோர் தீவிபத்தில் 5 பேர் மாண்டனர். ஒருவர் காயமுற்றார். ஐந்து வீடுகள் தீக்கிரையாயின. 19 பேர் வீடிழந்தனர்.

(பி டி ஸி)

## தவறுன பொத்தானை அழுத்தினர்!

### கைதிகள் தப்பினர்

வெலிங்டன்வெலியா, ஜன 16

இங்குள்ள சிறைச்சாலையொன்றின் காவலாளி, தவறுன பொத்தானை அழுத்தியதன் விளைவாக, கொலைக்குற்றம் சுமத்தப்பட்ட ஒருவர் உட்பட மூன்று கைதிகள் சிறையிலிருந்து தப்பிச்செல்ல முடிந்தது.

இம்மூன்று கைதிகளும் சிறைச்சாலை வாயிலுக்குச் சென்று அங்கிருந்த காவலாளியிடம் கேட்டைத் திறந்துவிடும்படி சைகை காட்டினர்களாம். அவர் இவர்களுடன் பேசுவதற்கான ஒலிபெருக்கிச் சாதனத்தை இயக்கும் பொத்தானை அழுத்துவதற்குப் பதிலாகத் தவறுதலாக கேட்டைத் திறந்துவிடும் பொத்தானை அழுத்திவிட்டாராம். கைதிகள் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத்தவறவில்லை.

ஆனால், இக்கைதிகள் தமது அறைகள் இருந்த இடத்திலிருந்து யாரும் காணுதவகையில் எவ்விதம் கேட்பக்கம்வந்து சேர்ந்தார்கள் என்பதற்கு அதிகாரிகளால் விளக்கம் கொடுக்கமுடியவில்லை.

(பி. டி ஸி.)

## செஞ்சீனவுக்கு பிரிட்டிஷ் பன்றிகள்

லண்டன், ஜன. 16

தனது பாரம்பரிய உணவான இனிப்பும், உறைப்புமான பன்றி இறைச்சியைப் பாதுகாக்கும் பொருட்டு, சீனு 53,000 பவுண் பெறுமதியான பிரிட்டிஷ பன்றிகளை வாங்கியுள்ளதென 'சண்டே டெலிகிராப்' பத்திரிகை இங்கு அறிவித்துள்ளது.

ஏற்கனவேஇரண்டுபெரிய தொகையான பன்றிகள் கப்பல்மூலம் ஷாங்காய்க்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அடுத்த மாதமுடிவில் இன்னும் 100 பன்றிகள் அங்கு செல்லுமெனவும் அப்பத்திரிகைமேலும்குறிப்பிட்டுள்ளது. (பி டி ஸி)

## குப்பிளான் வெற்றி

குரும்பசிட்டி, திங்கள்

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழக ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஆட்சேபித்த ஈவினை இளைஞர் கழக வீரர்கள் போட்டியிலிருந்து மைதானத்தைவிட்டு வெளிநடப்புச் செய்தனர். குப்பிளான் விக்னேஸ்வரா கோஷ்டிக்கும் ஈவினை இளைஞர் கழகத்திற்கும் மத்தியில் பலாலி ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற முதற்பிரிவு ஆட்டமொன்றின்போதே மேற்கண்ட சம்பவம் நடைபெற்றது.

இடைவேளையின் போது குப்பிளான் கோஷ்டி நாலு கோல் எண்ணிக்கையால் முன்னணியில் திகழ்ந்தது.

போட்டி முடிவடைய 10 நிமிடங்கள்வரை இருக்க ஈவினையைச் சேர்ந்த வீரர் ராசதுரை மத்தியஸ்தரால் எச்சரிக்கைசெய்யப்பட்டார். இந்த எச்சரிக்கையை ஆட்சேபித்த ஈவினைக்கோஷ்டி வீரர்கள் அனைவரும் மைதானத்தைவிட்டு வெளியேறினர். இதனைத் தொடர்ந்து மத்தியஸ்தர் இறுதியில் போட்டியை நிறுத்திவைத்து குப்பிளான் கோஷ்டிக்கு வெற்றியளித்தார். இப்போட்டிக்கு திரு. எம். பதிமநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

## டைகர் கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

டைகர் விளையாட்டுக் கழகத்துக்கும் புனிதவளன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் டைகர் கழகம் (5 — 0) வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. ஏ. ராஜா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## உரும்பராய் வெற்றி

பலாலி, திங்கள்

பலாலி, உரும்பராய் முதலாம் இரண்டாம் உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கிடையே பொங்கல் திருநாளை முன்னிட்டு பலாலியில் நடைபெற்ற போட்டியில் உரும்பராய் 1-ம் பிரிவு பலாலியை 2—1 கோல்களால் தோற்கடித்தது. உரும்பராய் இரண்டாம் பிரிவு பலாலியை 3 கோல்களால் தோற்கடித்தது. மத்தியஸ்தராக திரு. எஸ். சிவசுப்பிரமணியம்கடமையாற்றினர்.

## குடிகாரர் தொல்லை

மானிப்பாய், திங்கள்

மானிப்பாயின் முக்கிய பகுதிகளான வடக்குமானிப்பாய் சந்தியிலும் தெற்கு மானிப்பாய் ஆலடிச்சந்தியிலும் மாலைநேரத்தில் குடிகாரர்தொல்லை அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக சிலதடவைகளில் போக்குவரத்துகள் தடைப்படுவதோடு சண்டைகளும்மூண்டுவிடுகின்றது. அண்மையில் நடைபெற்ற ஒரு வாய்ச்சண்டை கைகலப்பாக மாறி மூவர் பிரஞ்ஞையற்ற நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

பெண்களும் சிறுவர்களும் இரவுநேரத்தில் இப்பகுதிக்கு செல்வது அபாயமாக இருப்பதாக ஆனைக்கோட்டைப் பொலிசாருக்குச் செய்த புகாரைத் தொடர்ந்து பொலிசார் இரவுநேரத்தில் தெருவில் மதுபோதையில் நிற்பவர்களை ஒவ்வொரு நாளும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்கின்றனர்.

உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## குப்பிளான் 'ஏ' பிரிவு சாம்பியனகத் தெரிவு

குரும்பசிட்டி, திங்கள்

குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையக் கோஷ்டி குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழக சுற்றுப் போட்டியில் 'ஏ' பிரிவுச் சாம்பியனைத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. பலாலி மைதானத்தில் கட்டுவன் ஞானோதயா கோஷ்டியுடன் கலந்துகொண்ட பலத்த போட்டிக்குப்பின் 4—3 கோல்களால் குப்பிளான் கோஷ்டி வெற்றிபெற்றது. இடைவேளையின்போது இரு கோஷ்டிகளும் தலா இரு கோல்களைப் பெற்றிருந்தன. கட்டுவன் கோஷ்டியே முதலில் இரு கோல்களையும் போட்டிருந்தது. இக்கோல்களை மணிராஜா என்றவீரர் அடித்திருந்தார். இடைவேளைக்குப்பின்னர் மிகத் திறமாக அமைந்த போட்டியில் மேலும் ஒவ்வொரு கோல்கள் இருகோஷ்டியின் சார்பிலும் போடப்பட்டது. கோல் எண்ணிக்கை 3—3 ஆகி சமனுயிற்று. எனவே 60 நிமிடங்கள் வரையிலும் ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும் ஆட்டம் வெற்றி தோல்வியின்றியே இருந்தது. மேலும் 10 நிமிடங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டது. இவ்வேளையில் குப்பிளான் 'பெனல்டி' மூலம் மேலும் ஒரு கோலைப் பெற்றது. சுமார் 70நிமிடங்கள் தொடர்ந்து விளையாடப்பட்ட ஆட்டம் ரசிகர்களின் பலத்த ஆரவாரத்துடன் இனிது நிறைந்ததாகக் காணப்பட்டது.

### 'பி' பிரிவு சம்பியன் போட்டி

ஏற்கனவே முதற் பிரிவு, 'பி' பிரிவு குறூப் சம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திருநெல்வேலி இந்து இளைஞர்கழகத்துடன் எதிர் வரும் புதன்கிழமை குப்பிளான் கோஷ்டி சாம்பியன் போட்டியில் பங்குபற்றும்.

## "விவசாயப்படையில் சேருக"

### இளைஞர்களுக்கு எம். பி. அழைப்பு

கோண்டாவில், திங்கள்

"இன்றைய சூழ்நிலையில் இலங்கையைப் பொறுத்தவரை பொருளாதாரப் பிரச்னையே முக்கிய இடம் வகிக்கின்றது. இப்பிரச்னையை நாம் தீர்க்கவேண்டுமானால் இளைஞர்கள் அரசாங்க உத்தியோகங்களில் மோகம் கொள்ளாது விவசாயத்தில் ஈடுபடவேண்டும். உங்களது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், இந்த நாட்டின் பொருளாதாரப் பிரச்னையை ஒரளவில் நிவிர்த்து செய்யவும் அரசாங்கம் "விவசாயப்படையை" அமைக்கவிருக்கிறது. அப்படையில் நீங்கள் சாதி, சமய வேறுபாடின்றி சேரவேண்டும்" என்று கோண்டாவில் வடக்கு சிறீ வாணிஸ்வரி சனசமூகநிலையத்தாரால் பொங்கல் தினத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் கூறினர்.

திரு. ச. போகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் நாகநாதன் மேலும் பேசுகையில், மன்னர், வவுனியா, கிளிநொச்சி, திருக்கோணமலை போன்ற இடங்களில் குடியேறி அங்குள்ள நிலங்களை பண்படுத்தி விவசாயத்தை செய்ய இளைஞர்கள் முற்படுவார்களானுல் எமது முக்கிய பிரச்னைகள் ஓரளவு அற்றுப்போகும் என்று கூறினர்.

## குழந்தையின் பிரிவால் தந்தை தற்கொலை

சாவகச்சேரி, திங்கள்

பிள்ளையின் பிரிவு தாங்காத தந்தை நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த மந்துவில் என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

தம்பிஐயா - ராமலிங்கம் (26 வயது) தனது மணமாகி சில காலம் பிள்ளையில்லாதிருந்து சில மாதங்கட்கு முன் ஓர் குழந்தை தங்களுக்குப் பிறந்ததாகவும் ஆனால் இரு வாரங்கட்கு முன்னர் அக்குழந்தை சுகவீனமடைந்து இறந்துவிட்டதாகவும் அதனால் அவர் மிகுந்த கவலையுடன் காணப்பட்டாரெனவும் சம்பவதினம் இவர் நச்சுத் திராவகமருந்தியது தமக்குத் தெரியவந்ததும் உடனடியாக சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்ததாகவும் ஆனால் அவர் ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டதாகவும் விசாரணையின்போது இவரது மனைவி சாட்சியமளித்தார்.

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரி டாக்டர் திரு. ஏ. மி. நல்லையா பிரேத பரிசோதனை நடத்தினர். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகம் விசாரணை முடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## கடற்தொழிலில் மாணவர்

யாழ்ப்பாணம், செவ்.

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற தொழிற் பயிற்சி அனுபவத் திட்டத்தின்கீழ் அமைந்த வேலைகளில் கடல் தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மேற்படி பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுடன் வண்ணார் பண்ணை தென்மேற்கு கிராம சேவையாளர் திரு. கே. எ. ஜபவிபட்டும் இதில் கலந்துகொண்டார்.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எம். ஜி. ஆருக்கு

# உடலை அசைக்கவும் நடமாடவும் முடிகிறது

## நீர் ஆகாரம் அருந்த அனுமதிக்கப்பட்டுள்ளார்

சென்னை, ஜன. 15 துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் துரிதமாக குணமடைந்து வருகிறார்.

இப்போது அவர் சிகிச்சைபெறும் ஆஸ்பத்திரியிலுள்ள தமது அறையில் விரும்பியபடி உலாவுவதற்கு முடிகின்றது. அறைக்குள்ளேயே அவர் இன்று இலேசாக நடமாடியதாக செய்தி கிடைத்தது. உடலை சிரமமின்றி அசைக்கவும் இப்போது அவரால் முடிகின்றது.

இன்று அவரை பேசுவதற்கு டாக்டர்கள் அனுமதிக்கவில்லை. பேசுவதனால் உடம்பு குணமாவது பாதிக்கப்படலாம் என்று டாக்டர்கள் கருதுகின்றனர். கெட்டியான உணவு எதுவும் அவர் அருந்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஆனால் சத்துள்ள நீர் ஆகாரங்களை அவர் அருந்துகின்றார். அவருக்கேற்பட்டுள்ள பட்ட காயங்களுக்கு போடப்பட்டுள்ள கட்டுக்கள் இன்னும் இரண்டொரு தினங்களில் பிரிக்கப்படலாம் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எம். ஜி. ஆரின் கழுத்தில் பாய்ந்த குண்டு அகற்றப்படக்கூடாதென்று டாக்டர்கள் முடிவுசெய்து அதை உள்ளேயே வைத்துவைத்து விட்டிருக்கிறார்கள். குண்டு எலும்பில் பாய்ந்திருப்பதால் அதனை எடுப்பது கஷ்டம் என்று கருதப்படுகின்றது. காலப்போக்கில் குண்டு எலும்போடு எலும்பாக மாறிவிடும் என்றும் கருதப்படுகின்றது.

மத்திய உணவு மந்திரி திரு. சி. சுப்பிரமணியம் இன்று அவரை ஆஸ்பத்திரியில் போய்பார்த்தார்.

**ராதாவின் நிலை**

எம். ஜி. ராமச்சந்திரனை சுட்டதாகக் கூறப்படும் நடிகவேள் எம். ஆர். ராதாவும் துரிதமாக குணமடைந்து வருகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் கெட்டியான உணவுகள் சாப்பிட அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

## 20 கார்கள் மோதிக்கொண்டன

கலிபோர்னியா, ஜன. 15 கலிபோர்னியாவில் போக்குவரத்து மிகுந்த வீதியொன்றில் இருபது கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதால் 2 பேர் மாண்டனர் 39 பேர் காயமுற்றனர்.

இங்கு கொட்டிக்கொண்டிருக்கும் கடும்பனி காரணமாகவே இந்நவிபத்து ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## விசுவநாதன் மறுப்பு

யாழ்ப்பாணம், திங்கள் திருமதி சிறிமா பண்டாரநாயகாவை யாழ்ப்பாணத்துக்கு அழைப்பதாக இன்றுவரை லங்காசமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளை தீர்மானிக்கவில்லை. யாழ்ப்பாணத்துக்கு வருமாறு திருமதி பண்டாரநாயகாவுக்கு கடிதம் எழுதவும் இல்லை. அவர் இங்கு வருவதாக பதில் எழுதவும் இல்லை.''

லங்கா சமசமாஜக்கட்சியின் யாழ்ப்பாணக் கிளைக் காரியதரிசி திரு. அ. விசுவநாதன் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். திருமதி பண்டாரநாயகா மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வரவிருப்பதாக வெளிவந்த செய்தி சம்பந்தமாகவே திரு. விசுவநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## திருகோணமலைக்கு அரிசிக்கப்பல்

# உணவு இலாகா அனுப்பியது

## உடனடி நடவடிக்கை அரிசித்தட்டுப்பாட்டை குறைத்தது

திருகோணமலை, ஞாயிறு திருகோணமலை மாவட்டத்தில் ஏற்படவிருந்த அரிசித்தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் நோக்கமாக உணவுஇலாகா ஓர் அரிசிக்கப்பலைத் திருமலைத்துறைமுகத்திற்கு அனுப்பி வைத்துள்ளது. எம்.வி 'அக்கில்' என்னும் இக்கப்பல் 10084 தொன் சீன அரிசியுடன் திருமலைத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்ததும் இறக்குமதிவேலைகள் அடுத்தநாள் ஆரம்பமானது.

திருமலை கூட்டுறவு துறைமுகத்தொழிலாளர் சங்கம் இறக்குமதிவேலைகளை மேற்கொண்டுள்ளது. கப்பலின் ஏஜெண்டுகளான கே. ஜெயபாலசிங்கம் கம்பனியார் கடமையாற்றுகின்றனர். இறக்குமதிவேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. இறக்குமதிவேலைகள் இம்மாதம் 26ம் திகதி முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 400 தொழிலாளர்கள் இறக்குமதிவேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# மட்டக்களப்பு நகரசபை மார்ச் 31-ல் கலைக்கப்படும்

கல்முனை, திங்கள் மட்டக்களப்பு நகரசபை மார்ச்மாதம் 31-ந்திகதியுடன் கலைக்கப்படவிருக்கின்றது

1965-ம் ஆண்டு மார்கழி மாதம்தான் இந்தநகரசபையின் எல்லைக்காலமாக இருந்தது. மாநகரசபை அந்தஸ்திற்கு உயர்த்தப்படுவதற்காக தொடர்ந்து சுமார்ஒன்றரை வருடத்திற்கு எல்லைக்காலம் பின்போடப்பட்டிருந்தது.

இவ்வருடம் ஏப்ரல்மாதம் முதலாந்திகதி தொடக்கம் மட்டக்களப்பு நகரசபைமாநகரசபை அந்தஸ்தை அடைகிறது.

## இளைஞர்களின் கோரிக்கை

அச்சுவேலி, திங்கள். ''தற்போதய அரசியல் சூழ்நிலையில், அரசாங்கத்திடம் பலர் தங்கள் கூப்பன்களை ஒப்படைத்துள்ளனர். இக்கூப்பன்களின் ஒருபகுதியைக் கோவில்களுக்கும் வழங்க வேண்டும். கோவில் முன்னேற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாக இருக்கும்'' என்று பத்தைமேனி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி கோப்பாய் எம்.பிக்கு அனுப்பியுள்ளனர்.

# 'வெளிநாடுகளுக்கு சென்று பெருமை தேடுங்கள்'

## சாரணர்களுக்கு உதவி ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு 'நமது நாட்டிலுள்ள சாரணர்கள் பிறநாடுகளுக்கு சென்று நமது நாட்டின் பெருமைகளையும் கலாச்சாரத்தையும் அங்கு தெரிவித்து நமது நாட்டைப்பற்றி பிறநாட்டவர் அறிந்து எமது நாட்டுக்கு பெருமை தேடித் தரத்தக்க வகையில் ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்'

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சாரணர் குழுவின் பொன்விழா வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய உதவி பிரதம சாரண ஆணையாளர் இராசநாயகம் முதலியார் ஏ.எல். தலைநாயகா கூறினார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சாரண இயக்கத்தில் சேர்ந்துள்ள எல்லோரும் நாட்டின் தேவைகளை உணர்ந்து அதற்காகச் செயலாற்றவேண்டும். இதில் சாரண இயக்கத்தோடு தொடர்புள்ள சகலரும் உழைக்கவேண்டும். சாரணர்கள் தமது வருங்கால சந்ததியினருக்கு நல்ல வழிகாட்டிகளாக இருந்தால்தான் இந்த உயரிய இயக்கம் மனிதகுலத்துக்கு நல்ல சேவையாற்றமுடியும்.

**யாழ். சாரணருக்கு பாராட்டு**

யாழ்ப்பாணத்திலுள்ள சாரணர்கள் மிகவும் ஊக்கமுடையவர்கள். இங்குஇந்த இயக்கம் மேலும் வளர்ச்சியடையக்கூடிய விதத்தில் அரசாங்கத்திடமிருந்து மேலும் உதவிபெறக்கூடிய வழிவகைகளை மேற்கொள்வேன்.'

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மூன்று சாரணர்கள் இம்முறை அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் உலக ஜாம்போரியில் கலந்துகொள்வது குறித்து நாம் மிக மகிழ்ச்சியடைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். சபாரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

இலங்கையில் 1916-ம் வருடத்தில் திரு.வின்சன்ட் மெண்டிஸ் என்பவர் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்துவைத்தார். அப்போதிருந்தே இந்துக்கல்லூரி இந்த இயக்கத்தில் பெரும் அக்கறைகாட்டிவந்துள்ளது. நமது கல்லூரியில் சாரணர் இயக்கம் நல்ல வளர்ச்சியடைந்துள்ளது குறித்து நான் பெருமையடைகின்றேன்.

ஏழைமக்களின் கஷ்டங்களைப் போக்கக்கூடிய வகையில் சாரணர் இயக்கத்தைப் பயன்படுத்த நாம் முயற்சி எடுத்து வருகின்றோம்.

சாரணர் இயக்கம் மாணவர்களை நல்ல பிரஜைகளாக்க உதவுகிறது என்றும் அவர் கூறினார்.

இவ்வைபவத்தில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு! வேர்னன் அபயசேகராவும் கலந்துகொண்டு பழைய சாரணர்களுக்கு விருதுகள் வழங்கினார்.

3-வது கிரிக்கெட் டெஸ்ட்

## மேற்கிந்தியக் கோஷ்டி 9:405 ரன்கள்

சென்னை, ஜன. 15 மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்தியாவுக்குமிடையே இப்போது நடைபெற்று வரும் 3-வது கிரிக்கெட் 'டெஸ்ட்' போட்டியின் மூன்றுவது நாளாகிய இன்று விளையாட்டின் இறுதியில் இந்தியாவின் முதல் இன்னிங்ஸ் தொகையான 404 ரன்களுக்குப் பதிலாக மேற்கிந்தியக் கோஷ்டி 9 விக்கெட் நஷ்டத்துக்கு 405 ரன்கள் எடுத்திருந்தது. ஆட்ட இறுதியில் மேற்கிந்தியக் கோஷ்டி காப்டன் சோபேர்ஸ் ஆட்டமிழக்காமல் 95 ரன்கள் எடுத்திருந்தார். அவருக்குத் துணையாக நின்ற பந்து வீச்சுக்காரர்களான கிரிபித்சும், ஹோலும் முறையே 24 ரன்களும், 81 ரன்களும் எடுத்து நன்றாக விளையாடினர்.

நாளை மீண்டும் 'டெஸ்ட்' ஆரம்பமாகும்.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் நிதிக்காக வின்ஸர்தியேட்டரில் நேற்று நடைபெறவிருந்த ''என்கடமை'' என்ற படத்தின் உதவி நிதிக் காட்சி, படப்பிரதி வந்துசேராமையால் பின்போடப்பட்டது என்பதை ஆதரவாளர்களுக்கு வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். மறுதிகதி பின்னர் அறிவிக்கப்படும்.

சாரணர் ஆலோசனைக்குழு. 2187

## தேவை

பொலிஷ்மன்

தளபாட வேலைகளைத் திறம்பட செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த (Polishman) பொலிஷ்மன் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். [illegible] 57, [illegible] யாழ்ப்பாணம். 2188

## வீதியின் சீர்கேடு

கிளிநொச்சி, திங்கள் கிளிநொச்சியில் இருந்து ஆறுமைல் தூரத்தில் உள்ள முறுகண்டியில் இருந்து அக்கராயன் குளம் ஊடாக வன்னேரிக்குளத்துக்குச் செல்லும் வீதி பெரிதும் சீர்கேடான நிலையில் உள்ளது.

## பஸ் சீர்கேடு

கிளிநொச்சி, திங்கள் கிளிநொச்சி இ. போ. ச. உபடிப்போவில் இருந்து குறிப்பாக அக்கராயன்குளம் உருத்திரபுரம், பூநகரி ஆகிய இடங்களுக்கு செல்லும் பஸ் சேவை மிகவும் சீர்கேடான முறையிலிருக்கிறது இச்சேவையின் மூலம் பிரயாணம் செய்யும் மக்கள் தினமும் கஷ்டத்துக்குள்ளாகின்றார்கள்,

## ''தொண்டுகளில் சிறந்தது சமயத்தொண்டு''

இணுவில், திங்கள் ''தொண்டுகளில் சிறந்தது சமயத்தொண்டு. நான் ஒரு அரசியல்வாதியாக இருந்த பொழுதிலும் சமயத்தொண்டு புரிபவர்களை நன்கு நேசிக்கிறேன். இந்நிலையில் எனது அன்புக்குரியவர் சமயத்தொண்டுக்கே தன்னை அர்ப்பணித்த இணுவையூர் வை. தியாகர் சுவாமிகள். அவரது தலைமையில் செல்லும் பஜனைக்கோஷ்டியினரை வழியனுப்பிவைத்துப் பெருமைப்படுகிறேன்.''

இவ்வாறு இணுவில் சிவகாமசுந்தரி சந்நிதானத்திலிருந்துபொங்கல்தினத்தன்று முன்விட்டுஇணுவில்தியாகசத்தி பஜனைசன்மார்க்கஇயக்கத்தின் ஆதரவில் இயக்கத்தலைவர் வை. தியாகர் சுவாமிகள் தலைமையில் நயினை நாகபூசணி சந்நிதானத்திற்குபுறப்பட்ட பஜனைக்கோஷ்டியினரை வழியனுப்பிவைத்துப் பேசிய உடுவில் எம்.பி திரு. [illegible] குறிப்பிட்டார். மற்றும் பலரும் பேசினர்.

## சட்டவிரோத குடியேற்றக்காரர் செம்மலையில் கைது

முல்லைத்தீவு, திங்கள் முல்லைத்தீவுப் பொலிஸ் சர்ஜண்ட் திரு. சிவஞானம் தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டி, முல்லைத்தீவைச்சேர்ந்த செம்மலையிலுள்ள கலைசசையை தோட்டத்தில் வடிவேலு சுப்பிரமணியம் என்பவரை, சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என சந்தேகத்தின்மீது கைதுசெய்து வவுனியாவிலுள்ள சட்டவிரோதக்குடியேற்றத்தடுப்பு முகாமுக்கு அனுப்பி உள்ளனர்.

விசாரணையின்போது இவர் சட்டவிரோதமாகவே இலங்கைக்கு வந்ததாகக் கூறியதன் பேரில் தற்போது தடுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளார்.

## சமசமாஜக்கட்சி வாலிபமுன்னணி

உடுப்பிட்டி, திங்கள் லங்கா சமசமாஜக்கட்சி வாலிபமுன்னணியின் விசேட பொதுக்கூட்டம் பதிப்பில் டாக்டர் எஸ். எஸ். மாலிலா மணி தலைமையில் நடைபெற்றது.

மறைந்தகவிஞர் மு. செல்லையாவின் மறைவிற்கு அனுதாபம்தெரிவித்து இருநிமிஷ அஞ்சலிசெலுத்தப்பட்டது.

## மீண்டும் வேலை

நாவலப்பிட்டி, திங்கள் மாத்தளை வேரகமத் தோட்டத்தை சேர்ந்த ல. தோ. தொ. சங்க அங்கத்தவர்களான திரு. வீரையாவு, திருமதி வீ. செல்லம்மாளும் தோட்ட நிர்வாகத்தால் வேலைநீக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக கண்டி தொழில் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கில் பிரஸ்தாப தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைவழங்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org